**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண். 113 /2012**

தேதி . 01.07.2022

பெயர் . வெங்கடேசன்

த/பெ . கன்னையா மந்தடி

வயது .

வா.சா. 1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்துக்கு எந்த திசையில் சாலை உள்ளது என்றால் கிழக்கு மற்றும் வடக்கு பக்கத்தில் ரோடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் பிரதிவாதி ஜெயபால் செட்டி என்பவர் தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து விட்டதாக வழக்குமூலம் கூறி வழக்கு தகர்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் எவ்வளவு அளவு அடி தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி நுழைந்துள்ளதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் எந்த திசையில் பிரதிவாதி ஜெயபால் செட்டி அத்துமீறி உள்ளே நுழைந்து விட்டார் என்ற விபரம் குறித்து குறிப்பிட்டு நான் பிராதில் கூறவில்லை என்றால் கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்கள் ஆகும். எனது பிராதில் நான் குறிப்பிடவில்லை. எனது வழக்கு தாவா சொத்தின் மீது உரிமை விளம்புகை பரிகாரம் கோரி மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். சொத்தினை சுவாதீனம் திரும்ப பெறுவதற்காக பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் தாவா சொத்து எனக்கு சொந்தமானது ஆகையால் நான் அவ்வாறு பரிகாரம் கோரவில்லை.தாவா சொத்து சர்வே எண்215/8 மற்றும் 215/9 என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கு திசையின் அளவுகளை நான் பிராதில் குறிப்பிட்டுகூறவில்லை என்றால் சரிதான் மொத்த விஸ்தீரணத்தை செண்டாக பிராதில் கூறியுள்ளேன். பிரதிவாதி ஜெயபால் செட்டியின் வழக்கில் அவர் கோரியுள்ள சொத்தின் சர்வே எண்218/5ஏ, பிளாட் மனைஎண்.134 என்றால் சரிதான். பிரதிவாதி ஜெயபால் செட்டிக்கு சொந்தமான மனைக்கு கிழக்கு பக்கம் 20 அடி ரோடு மற்றும் தெற்கு பக்கம் 30 அடி சாலை உள்ள என்றால் சரிதான். ஜெயபால் செட்டிக்கு சொந்தமான மனை எண்218/5ஏ-யின் மேற்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அசல் வழக்கு எண்123/12ல் இ.ம.எண்.747/12ன் படி நிர்ணயம் செய்யப்பட்டு எனது சொத்து மற்றும் பிரதிவாதியின் சொத்து அளக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மற்றும் நிலஅளவையர் தாவா சொத்தின் பார்வையிட்டு அளவீடு செய்த சமயத்தில் நானும் பிரதிவாதி தரப்பினர்களும் உடன் இருந்தோம் என்றால் சரிதான். நிலஅளவையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பச்சைநிறம் நிலம் பிரதிவாதி ஜெயபால் செட்டிக்கு சொந்தமானது என்றால் சரிதான் அது எனக்கு சொந்தமானது ஆகும். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கை மற்றும் வரைபடத்தில் பிரதிவாதிக்கு சொந்தமான இடம் பச்சை நிறத்தில் உள்ளதாக கூறியுள்ளபடியால் அது எனக்கு சொந்தமானது என்று கூறுவது ஏற்றுக்ககொள்ளத்தக்கதல்ல. பிரதிவாதி 23/07/2002ம் சரியான உரிமையாளரிடமிருந்துதான் தாவா சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு சொந்தமானது ஆகும்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**